Registered as a News Paper

பொழிவு: 27
குவிப்பு: 03
பக்கங்கள்: 10
விலை: 50/-
வைகாசி: 2022
(ISSN 1800-2641)

# மன்னா

MANNA மன்னார் மறைமாவட்டத்தின் தமிழ் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை මන්නා

THE TAMIL CATHOLIC MONTHLY BY THE DIOCESE OF MANNAR - Kalaiyaruvi, Social Communication Centre, Manna Paper Office, No.202, Talaimannar Road, Mannar, Sri Lanka.
Telephone No : 023-2250789 / 076-3801841, Email : mannamnrc@gmail.com, Web-www.manna.lk, Fb - Mannar Catholic Media
"Registered in the Department of Posts of Sri Lanka under No. QD / 104 / News / 2021"

"ஒரு கூட்டொருங்கியக்கத் திருஅவைக்காக 41வது புதிய ஆண்டுப்பயணம்"

## மன்னார் மறைமாவட்டம் ரீதியிலான மே 18 நினைவேந்தல் நிகழ்வு





தமிழ் ஈழ விடுதலை வரலாற்றிலே மறக்க முடியாத மன்னிக்க முடியாத நாளாகிய மே 18, போர்க் குற்ற நாளாக கருதப்படுகிறது இற்றைக்கு 13 ஆண்டுகளாக போர் மௌனித்த போதும் தமிழ் மக்களுடைய விடுதலைக்கு எந்தவிதமான தீர்வும் கிடைக்கவில்லை பல்லாயிரக்கணக்கான மக்கள் போராட்டக்காலங்களில் இறந்து போனாலும் இறுதி யுத்தத்திலே கிட்டத்தட்ட இரண்டு இலட்சத்திற்கு உட்பட்ட மக்கள் இறுதி நாட்களிலே இறந்து போனதாக எமது மறைந்த முன்னையநாள் ஆயர் மேதகு இராயப்பு ஜோசேப்பு ஆண்டகை அவர்கள் மனித உரிமைகள் மீறல் குற்றமாக சொல்லி அதனை வெளிஉலகத்திற்கு தெரியப்படுத்தி இருந்தார்.

இவ்வாறு மக்கள் தங்களது உறவுகளை இழந்து சொந்தங்களை இழந்து பிள்ளைகளை பெற்றோர் இழந்து தவித்துக் கொண்டு வந்த நாட்களினை இந்த மே 18 நினைவேந்தல் இலங்கை பேரினவாத அரசாங்கத்தினாலே மறுக்கப்பட்டது. நினைவேந்தல் தூபிகள் உடைக்கப்பட்டது. . இவ்வாறு மக்கள் தங்களுடைய மனங்களிலே காணப்பட்ட வடுக்களை காயங்களை நினைவுகூர முடியாமல் உறவுகளை நினைத்து செபிக்க முடியாமல் தவித்து வந்தார்கள். இந்த முறை நாட்டு சூழ்நிலை வித்தியாசமாக மாறியிருந்த படியினாலே இலங்கை அரசினாலே நினைவேந்தல் தடை இல்லை என்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

→05

## கலையருவியினால் நடாத்தப்பட்ட திருப்பாடுகளின் காட்சி தவக்கால ஆற்றுகை




12.04.2022 அன்று மன்னார் மறைமாவட்ட கலையருவியினால் திருப்பாடுகளின் காட்சி ஆற்றுகை மேடையேற்றப்பட்டது. இரண்டு நாட்கள் ஆற்றுகை செய்யப்படவிருந்த இக் காட்சியானது சீரற்ற காலநிலை காரணமாக ஒருநாள் மட்டும் ஆற்றுகை செய்யப் பட்டிருந்தாலும் மிகவும் சிறப்பான முறையில் அனைத்து நிகழ்வுகழும் முன்னெடுக்கப்பட்டிருந்தது. இந்நிகழ்வானது பேரன்பிற்கும் பெருமதிப்பிற்குமுரிய ஆயர் பேரருட் கலாநிதி இம்மானுவேல் பெர்ணாண்டோ ஆண்டகை மற்றும் பெருமதிப்பிற்குரிய குருமுதல்வர் அருட்பணி P.கிறிஸ்துநாயகம் அடிகளார் ஆகியோரின் வரவேற்புடனும் கௌரவிப்புடனும் மாலை 7.30 மணியளவில் ஆரம்பமானது.

→04

## முன்னாள் ஆயர் அமரர் மேதகு இராயப்பு ஜோசேப்பு ஆண்டகை அவர்களின் ஓராண்டு நிறைவின் நினைவுதின நிகழ்வு




01.04.2022 அன்று அன்பிற்கும் பெரும் மதிப்பிற்கும் உரிய எமது மன்னார் மறைமாவட்ட முன்னாள் ஆயர் அமரர் மேதகு இராயப்பு ஜோசேப்பு ஆண்டகை அவர்கள் இறைபதமடைந்து ஓராண்டு நிறைவினை நினைவு கூர்ந்து 02.04.2022 அன்று புனித செபஸ்தியார் பேராலயத்தில் எமது ஆயர் பேரன்பிற்கும் பெருமதிப்பிற்கும் உரிய இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையின் தலைமையில் விசேட திருப்பலி நிறைவேற்றப்பட்டது.

இத் திருப்பலியானது காலை 09.00 மணியளவில் ஆரம்பிக்கப்பட்டது. தந்தையோடு இணைந்து மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி P.கிறிஸ்துநாயகம் அடிகளாரும் கலந்துகொண்டார்.

→04

## 74 ஆவது பிறந்த நாளை நினைவுகூறும் மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட் கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை



மே மாதம் 20ம் திகதி எம் அன்பிற்கும் பெருமதிப்பிற்குமுரிய மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட் கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை அவர்கள் தனது 74ஆவது பிறந்த நாளை ஆயர் இல்லத்தில் குருக்கள் மத்தியில் நினைவுகூர்ந்து மகிழ்ந்தார்.

ஆயர்தந்தையின் இறைபணி சிறக்கவும் வருகின்ற காலங்களிலே எமது மறைமாவட்டத்திற்காக தொடர்ந்து பணியாற்றவும் தேவையான உடல் உள ஆன்மீக நலன்கள் இறைவன் அருள வேண்டுமென்று எம் மறைமாவட்டத்தின் பாதுகாவலி மருதமடு திருத்தாயார் எம் ஆயர் தந்தைக்காக பரிந்து பேசுவாராக.

ஆயர் தந்தைக்கு மன்னார் மறைமாவட்ட மக்கள் ரீதியாகவும் மன்னா பத்திரிகை சார்பாகவும் மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

## புனிதர் பட்டம்பெறும் முதல் தமிழர் தேவசகாயம் பிள்ளை




தமிழ்நாட்டின் தென்கோடி பகுதியான கன்னியாகுமரியில் பிறந்த தேவசகாயம்பிள்ளை மறைசாட்சியாக கத்தோலிக்க திருச்சபையைச் சேர்ந்த கிறிஸ்தவர்களால் போற்றப்பட்டு வருகிறார்.

இவருக்கு 15.05.2022 அன்று உரோமில் நடைபெற்ற விழாவில் எமது திருத்தந்தையினால் புனிதர் பட்டம் வழங்கப்பட்டு புனிதர் நிலைக்கு உயர்த்தப்பட்டுள்ளார். இவருடைய வாழ்வை நோக்கினோமானால் இவர் கன்னியாகுமாரி மாவட்டம் நட்டாலத்தில் 1712 ஆம் ஆண்டு பிறந்தார். இவரது இயற்பெயர் நீலகண்டபிள்ளை என்பதாகும். நீலகண்டன் கேரள மாநிலத்தில் உயர் ஜாதி சமுதாயமான நாயர் சமுதாயத்தைச் சேர்ந்தவர். இவருக்கு பார்க்கவி அம்மாள் என்ற பெண்ணுடன் திருமணம் ஆகியிருந்தது.

→05

"மன்னார் மறைமாவட்டம் வேதசாட்சிகளின் பூமி"

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மன்னா

## பதிப்பாசிரியரின் மனப்பொழிவு

கிறிஸ்து யேசுவில் அன்பான வாசகர்களே! நீண்ட இரண்டு மாத கால இடைவெளிக்குப் பின் மன்னா பத்திரிகையினூடாக உங்களை சந்திப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

**மன்னா**

கடந்த இரண்டு மாதங்கள் மன்னா அச்சிடத் தேவையான மூலப்பொருட்கள் தட்டுப்பாடு காரணமாக வெளியிட முடியாமைக்கு வருந்துகின்றோம். தற்போது அதிகூடிய விலையில் மூலப்பொருட்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. இதனை நிவர்த்தி செய்ய மன்னா பத்திரிகை நிர்வாகம் ஒன்றுகூடி ஆயர், குருமுதல்வர் தலைமையில் எடுத்த முடிவின் விளைவாக 8 பக்கங்கள் கொண்ட மன்னா பத்திரிகை அச்சிடப்பட்டு விலை 50 ரூபாவாக சற்று உயர்த்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. நாட்டின் நிலமை யாவரும் அறிந்ததே, ஆகவே உங்கள் பூரண ஒத்துழைப்பை எதிர்பார்த்து நிற்கின்றேன். பங்குனி, சித்திரை மாத நீத்தார் நினைவுகள் கால சூழ்நிலை காரணமாக இம்மாத இதழில் இணைக்கப்பட்டுள்ளது.

**எமது தாய்நாடு**

எமது தேசம் இந்நாட்களில் சந்திக்கின்ற அரசியல், பொருளாதார நிலமை யாம் அறிந்ததே. உலகம், உலகத் தலைவர்கள் யாவரும் தங்கள் சுயநலத்திற்காகத்தான் வாழ்கிறார்கள் என்பதும் எமக்குத் தெரிகிறது. அனைத்தையும் இழந்த ஒரு தமிழ் சமூகமாக நாம் வாழ்ந்து வருகின்றோம், இன்று நடைபெறுவது எமக்குப் புதிதல்ல. பழகிப்போன மனங்களில் பதிந்துள்ள சோக கஸ்ர நிகழ்வுகள்தான் தற்போது நாம் சந்திப்பது. பொருளாதாரத் தடை, பசி, பட்டினி, ஆயுத சூழல், இராணுவ பொலிஸ் அராஜகங்கள், அடிமைத்தனம், அடக்குமுறைகள் அனைத்தும் நாம் சந்தித்தவை. ஆகவே இந்நாட்கள் நாம் முகம்கொடுக்க கூடியவைதான். இருந்தாலும் நம்பிக்கை இழந்துவிடாமல் மனஉறுதியோடு பயணிப்போம். இறைவன் கொடுத்த இயற்கையை வளர்ப்போம். அன்றாட உணவு பெறக்கூடிய வீட்டுத்தோட்டத்தினை உருவாக்குவோம். அன்னை மரியின் மாதமாகிய இம்மாதத்திற்கு எம்மை ஒப்புக்கொடுத்து தேசத்தின் விடுதலைக்காய் செபிப்போம்.

**புனித தேவசகாயம் பிள்ளை**

ஆசிய தேசத்தில் இம்மாதம் இறைவன் கொடுத்த புனிதர், இவர் ஒரு தமிழர் ஆவார். எமது வேதசாட்சிகள் 600க்கும் மேற்பட்டோர் இறந்த நிலையில் புனித நிலைக்கு உயர்த்தப்பட வேண்டிக்கொண்டிருக்கின்ற இவ்வேளையில் எமக்குக் கிடைத்த புனிதர் ஒரு பொதுநிலைக் கிறிஸ்தவராவார். தன்னை முழுமையாக இறைவனுக்கும், திரு அவைக்கும் அர்ப்பணித்து மறைசாட்சிகளாக நாமும் அவர் பரிந்துரையால் புனிதமடைய இறைவனோடு என்றும் இணைவோம்.

இறையாசீரும் அன்னையின் பரிந்துரையும், மன்னார் மறைசாட்சிகளின் பரிந்துரையும் என்றும் எமக்கு கிடைப்பதாக...

**என்றும் கிறிஸ்துவில்**
**அருட்பணி. ம. செல்வநாதன் பீரிஸ்**
**மன்னா பதிப்பாசிரியர்**

## கன்னாட்டி புனித சூசையப்பர் ஆலயத் திருவிழா நிகழ்வு



கன்னாட்டி புனித சூசையப்பர் ஆலயத் திருவிழா திருப்பலி மிகவும் சிறப்பான முறையில் 01-05-2022 காலை 6:30 மணியளவில் திருச்செபமாலையும், 07.00 மணியளவில் திருவிழாத் திருப்பலி ஒப்புக்கொடுத்தார்.

திருப்பலி மன்னார் மறைமாவட்ட வாழ்வுதய இயக்குனர் அருட்பணி அன்ரனி அடிகளாரினால் தலைமை தாங்கி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

பங்குத்தந்தை அருட்பணி அன்ரனி சோசை அடிகளார் ஒழுங்குபடுத்தியிருந்தார்.

➡ 06

## அருட்சகோதரி பிலிப்பு சந்திரலேனா அவர்களின் வெள்ளி விழா நிகழ்வு



வஞ்சியன்குளம் பங்கிற்குட்பட்ட புதுக்கமம் கிராமத்தைச் சேர்ந்த அன்புக்கன்னியர் சபையின் அருட்சகோதரி பிலிப்பு சந்திரலேனா 04.02.2022ம் திகதி வெள்ளிக்கிழமை அன்று தனது துறவற பணிவாழ்வின் வெள்ளி விழாவினை கிளிநொச்சி இராமநாதபுரம் அன்புக்கன்னியர் இல்லத்தில் நினைவு கூர்ந்தார். அத்தினத்தை மகிழ்விக்கும் முகமாக அவரது சொந்த கிராமமான புதுக்கமத்தில் 26.02.2022 ம் திகதி சனிக்கழமை காலை 10.30 மணியளவில் புனித சூசையப்பர் ஆலயத்தில் நன்றித் திருப்பலி நிறைவேற்றப்பட்டதோடு உற்றார் உறவினர்களால் அவரை வரவேற்கும் நிகழ்வும் வெகு விமர்சையாக இடம்பெற்றது●

## டிவைன் மெர்சி தியான மையமானது கள்ளிகட்டைக்காடு கிராமத்தில்



டிவைன் மெர்சி தியான மையமானது முதன் முறையாக கள்ளிகட்டைக்காடு கிராமத்தில் அமைக்கப்பட்டு 21.04.2022 அன்று எமது மதிப்பிற்குரிய குருமுதல்வர் அருட்பணி கிறிஸ்துநாயகம் அடிகளாரினால் திறந்து வைக்கப்பட்டதுடன் 24.04.2022அன்று இறையிரக்க பெருவிழாவும் கொண்டாடப்பட்டது.

இத் திருவழாவிற்கான ஆயத்த நாட்களின் போது அருட்பணி அகஸ்ரீன் வல்லூரான் அடிகள் மற்றம் அருட்பணி அகஸ்ரீன் முண்டேகாட் அடிகள் ஆகியோரால் சிறப்பு வழிபாடுகள் முன்னெடுக்கப்பட்டதுடன் மேலும் பல குருக்கள் இணைந்து ஆயத்த நாளுக்கான திருப்பலியையும் நிறைவேற்றியிருந்தனர்.

➡ 06

## மன்னார் மறைமாவட்ட திருவழிபாட்டு நாட்காட்டி

### வைகாசி 2022

01. தொழிலாளர்களின் பாதுகாவலர் புனித யோசேப்பு விழா - கன்னாட்டி, புதுக்கமம், வேப்பங்குளம், கற்கிடந்தகுளம், அச்சங்குளம், மானங்கவெளி
- குழந்தையேசு திருவிழா - பாவிலுபட்டான்கட்டிகுடியிருப்பு

03. புனித யூதாததேயு திருவிழா - காயாக்குளி
- திருச்சிலுவை விழா - கள்ளியகட்டைக்காடு
- புனித பிலிப்பு அப்போஸ்தலர் விழா - தேனுடையான், முள்ளிகண்டல்
- புனித யோசேப்பு திருவிழா - பூம்புகார்

04. புனித வேளாங்கண்ணி திருவிழா - பத்தினியார் மகிழன்குளம்

05. இறையிரக்க ஆண்டவர் திருவிழா - இருதயபுரம்
- புனித மரியமாதா திருவிழா - பெரியநாவற்குளம்
- புனித யோசப்வாஸ் திருவிழா - சௌத்பார்

10. புனித செபமாலை அன்னை திருவிழா - பிச்சகுளம்

11. புதமை மாதா திருவிழா - குகன்நகர்

13. புனித பற்றிமா மாதா திருவிழா - பற்றிமா நகர், அண்ணாநகர்

15. புனித வேளாங்கண்ணி மாதா திருவிழா - தேத்தாவாடி மருதங்குளம், களிமோட்டை, இரணைஇலுப்பைக்குளம்.
- புனித யூதாததேயு திருவிழா - ஒலிமடு
- புனித பூண்டி மாதா திருவிழா - எமில்நகர்
- புனித பத்திமா அன்னை திருவிழா - மணிபுரம்

19. புனித பத்திமா அன்னை திருவிழா - ஜீவபுரம்
- புனித யோசேப்பு திருவிழா - சேமமடு

20. குழந்தையேசு திருவிழா - சமணங்குளம்
- புனித அடைக்கல அன்னை திருவிழா - தட்டாங்குளம்
- புனித சவேரியார் திருவிழா - சின்னப்பண்டிவிரிச்சான், செட்டியார்மகன் கட்டையடம்பன், தேவன்பிட்டி, கோட்டகுளம்
- மேதகு பிடலிஸ் லயனல் இம்மானுவேல் பெர்னான்டோ ஆண்டகை மன்னார் ஆயர் - பிறந்த தினம்

24. சலேசிய குருக்கள் மற்றும் அருட்சகோதரிகளின் விழா

26. தூய பிலிப்பு நேரியார் திருவிழா - ஆத்திக்குழி, கொன்னயன் குடியிருப்பு, இசைமாலைத்தாழ்வு, கன்னாட்டி

29. புனித இராக்கினி மாதா திருவிழா - இராசேந்திரங்குளம்
- கர்த்தர் ஆலய திருவிழா - கீரி

30. புனித றீற்றம்மா திருவிழா - உமநகரி
- புனித செபமாலை அன்னை திருவிழா - மழுவராயர் கட்டையடம்பன்
- கர்த்தர் ஆலயத் திருவிழா - சுண்டிக்குழி

31. புனித அன்னை வேளாங்கண்ணி திருவிழா - மாதிரிகிராமம்
- [illegible] மாதா திருவிழா - பாரதிபுரம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## துறவற அர்ப்பண வாழ்வில் 25 வருட நிறைவில் அருட்சகோதரி ஜெயவதி



துறவற அர்ப்பண வாழ்வில் கடவுளுக்கு தன்னை முழுமையாக அர்ப்பணித்து இத்துடன் 25 வருட நிறைவினை கொண்டாடும் கன்னாட்டி புனித சூசையப்பர் ஆலயத்தைச் சேர்ந்த அருட்சகோதரி மரியாம்பிள்ளை அனற் ஜெயவதி F.M.M கடவுளுக்கு நன்றிகூறி 27-04-2022 அன்று காலை 9:30 மணியளவில் கன்னாட்டி புனித சூசையப்பர் ஆலயத்தில் திருப்பலி நிறைவேற்றப் பட்டது. அருட்சகோதரி அவர்களை நட்டுவாங்கம் மேள தாளங்களோடு அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், இறைமக்கள் புடைசூழ ஆலயத்திற்கு அழைத்து வரப்பட்டபின் திருப்பலி ஆரம்பமாகியது, திருப்பலியினை அளவக்கை பங்குத்தந்தையும், அருட்சகோதரியின் உடன்பிறந்த சகோதரருமான அருட்பணி ஜெயசீலன் அடிகளார் தலைமைதாங்கி ஒப்புக்கொடுத்தார்.●

## அருட்பணி செ.அந்தோனிமுத்து குரூஸ் அமதி அடிகளாரின் குருத்துவ வாழ்வின் 25 ஆண்டுகள் நிறைவு



தாழ்வுபாடு மண்ணின் மைந்தர் அருட்பணி செ.அந்தோனிமுத்து குரூஸ் அமதி (ரவி) அடிகளார் குருத்துவ வாழ்வில் 25 ஆண்டுகள் நிறைவு செய்ததையிட்டு தாழ்வுபாடு கிராமத்தில் 08.05.2022 ஞாயிறு தினம் பங்கு மக்களால் யூபிலி விழா கொண்டாடப்பட்டது. காலை 9.15 மணியளவில் மேதகு ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை முன்னிலையில் அருட்தந்தையர்கள் அருட்சகோதரர்கள் அருட்சகோதரிகள் பங்கு மக்கள் புடை சூழ மாலை அணிவிக்கப்பட்டு அடிகளார் வரவேற்கப்பட்டார். வாத்திய இசைக்குழுவினால் வாத்தியம் முழங்க அடிகளார் அழைத்து வரப்பட்டு பின்னர் ஆலய முன்றலில் கிராமத்தின் பாரம்பரிய முறைப்படி மத்தள வாத்தியத்துடன் ஊர்ப் பெரியவர்களால் பாக்கள் இசைக்கப்பட்டு அடிகளார் கௌரவிக்கப்பட்டார். பின்னர் சிறப்பான விதமாகக் கூட்டுத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

## கௌரவிப்பு நிகழ்வு





மடுறோட் பங்கிற்குட்பட்ட பூமலர்ந்தான் கிராமத்தில் இருந்து பல்கலைக்கழகம் சென்று கிராமத்தின் முதல் பட்டதாரிகளாக பட்டங்களைப் பெற்றுக்கொண்ட செல்வன் L. சுதர்சன் மற்றும் செல்வன் J. டினோஜ்ராஜ் ஆகியோர் 06.03.2022ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று பங்கு மக்களினால் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

இவர்களுக்கான பாராட்டுச் சின்னத்தினை பங்குதந்தை அருட்பணி G.மங்களதாசன் (SSS) அடிகளார் வழங்கி வைத்தார். மேலும் இந்நிகழ்விற்கான சகல ஏற்பாடு -களையும் ஆலய சபையினர் ஏற்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.●

**மன்னாவை அறிமுகம் செய்யுங்கள்**

**உள்நாட்டில் அல்லது வெளிநாட்டில் இருக்கும் உங்கள் உறவினர் மற்றும் நண்பர்கள் மன்னாவைப்பெற வழிசெய்யுங்கள்.**
**ஒருவருடத்திற்கான உள்நாட்டுச் சந்தா ரூபா. 1500/=,**
**வெளிநாட்டுச்சந்தா ரூபா. 5000. எம் மன்னா வாடிக்கையாளர்களே உங்கள் சந்தாக்காலம் முடிவடையும் முன்னதாக உங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளுங்கள்.**

# மறைமாவட்டச் செய்திகள்

## வவுனியா வேப்பங்குளம் புனித சூசையப்பர் ஆலய திருவிழா நிகழ்வு





வவுனியா வேப்பங்குளம் புனித சூசையப்பர் ஆலயத் திருவிழா திருப்பலி மிகவும் சிறப்பான முறையில் 01-05.2022 காலை 6:30 மணியளவில் திருச்செபமாலை ஆரம்பமாகி 7:00 மணியளவில் திருவிழாத் திருப்பலி மன்னார் மறைமாவட்ட ஆயரின் சிறப்பு பிரதிநிதி எமிலியாம்ஸ்பிள்ளை அடிகளாரினால் தலைமை தாங்கி ஒப்புக் கொடுக்கப்பட்டது. மன்னார் மறைமாவட்ட திருப்பாலத்துப சபை இயக்குனர் அருட்பணி சவுல்நாதன் அடிகளார். பங்குத்தந்தை அருட்பணி ஆரோக்கியம் அடிகளார், வவுனியா அ.ம.தி, அமைதிஅகம் குழும தலைவர் அருட்பணி கமலானந்தன் அடிகளார். வவுனியா வாழ்வோதய இணை இயக்குனர் அருட்பணி அருண்தாஸ் அடிகளார், திருத்தொண்டர் டிசாந்தன் ஆகியோரும் இணைந்து இத்திருப்பலியை சிறப்பித்திருந்தார்கள்.●

## வவுனியா பத்தினியார் மகிழங்குளம் புனித வேளாங்கண்ணி ஆலயத் திருவிழா




கடந்த 07-05-2022 அன்று வவுனியா பத்தினியார் மகிழங்குளம் புனித வேளாங்கண்ணி ஆலயத் திருவிழா திருப்பலி காலை 6:30 மணியளவில் திருச்செபமாலையுடன் ஆரம்பிக்கப்பட்டு ஓமந்தை பங்குத்தந்தை அருட்பணி ஜெகானந்தன் அடிகளாரின் தலைமையில் S.K.தேவராஜா கொடுதோர் (EV) அடிகளார், அருட்பணி பிறேமானந்த் OFM Cap அடிகளார், உதவிப் பங்குத்தந்தை, திருத்தொண்டர் ஆகியோருடன் இணைந்து கூட்டுத் திருப்பலியாக ஒப்புக்கொடுக்கப்பட்டது. ●

## வவுனியா அண்ணாநகர் புனித பற்றிமா அன்னை ஆலயத் திருவிழா



வவுனியா அண்ணாநகர் புனித பற்றிமா அன்னை ஆலயத் திருவிழாவானது மிகவும் சிறப்பான முறையில் நடைபெற்றது. திருவிழாத் திருப்பலியானது பங்குத்தந்தை அருட்பணி தேவராஜன் அடிகளாரின் ஒழுங்கமைப்பில் கோமரசங்குளம் பங்குத்தந்தை அருட்பணி ரொஷான் அடிகளாரினால் திருவிழாத் திருப்பலி தலைமைதாங்கி ஒப்புக் கொடுக்கப்பட்டது.●


## வவுனியா ஓமந்தை பற்றிமா நகர் தூய பற்றிமா அன்னை ஆலய திருவிழா



வவுனியா ஓமந்தை பற்றிமா நகர் தூய பற்றிமா அன்னை ஆலயத் திருவிழாவானது 13.05.2022 அன்று காலை 07.30 மணியளவில் திருச்செபமாலையுடன் ஆரம்பமானது.

இத்திருவிழாத் திருப்பலி மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி P.கிறிஸ்துநாயகம் அடிகளாரும் இன்னும் பல குருக்களும் இணைந்து கூட்டுத் திருப்பலியாக ஒப்புக்கொடுக்கப்பட்டது.●

## வவுனியா முதல் நன்மை கொண்டாட்டம்



வேப்பங்குளம் புனித சூசையப்பர் ஆலயத்தில் பங்குதந்தை அருட்பணி ஆரோக்கியம் அடிகளாரின் ஏற்பாட்டில் கடந்த 15.05.2022 அன்று காலை 7.30 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. 22 மாணவ மாணவிகளுக்கு நற்கருணைத் திருவருட்சாதனம் வழங்கப்பட்டது.●

## ஒடுக்கப்பட்டோரின் உரிமை வாழ்வில் எம் லயன்சின் புனித வளனார் சபை

அருட்சகோதரி சகாயமேரி ஞதுரு
புனித வளனார் சபை, மன்னார் மறைமாவட்டம், மன்னார்

QUE TOUS SOIENT UN - MAY THEY ALL BE ONE - QUE TODOS SEAN UNO

உருவிழந்த இந்த உலகிற்கு உருக்கொடுக்க, இறைவன் வகுத்த மீட்பின் திட்டத்தில் தன்னை முழுமையாக இணைத்துக்கொண்டவர் தூய வளனார். மிகவும் பிரியமுள்ள தம்மகன் இயேசுவுக்கு பொறுப்புள்ள, பாசம் நிறைந்த நல் தந்தையாக வாழ்ந்தவர். வாழ்வின் ஒவ்வொரு நிகழ்வுகளிலும் இறைவனின் விருப்பம் என்ன என்பதை உணர்ந்து , அதற்குக் கீழ்ப்படிந்து மறைந்த வாழ்வு வாழ்ந்தவர். தான் செய்த தச்சுத்தொழிலையே உன்னதமான மேலான தொழிலாகக் கொண்டு கடின உழைப்புக்குச் சான்று பகர்நதவர். அன்னை மரியாளைத் தன் மனைவியாக ஏற்றுக்கொண்டதோடு வாழ்வின் அனைத்து நிகழ்வுகளிலும் பொறுமையைக் கைக்கொண்டு சிறந்த நீதிமானாக வாழ்ந்தவர். எளிமை , வாய்மை ,கீழ்படிதல் இவற்றை வாழ்ந்துகாட்டி திருக்குடும்ப வாழ்வில் மகிழ்வான குடும்பத்திற்கு மாதிரிகையாய் விளங்கிய தூய வளனாரை பாதுகாவலராகப் பெற்றிருப்பதில் எம் லியோன்சின் புனித வளன் சபை பெருமகிழ்வு கொள்கின்றது.



லியோன்சின் புனித வளனார் சபை பிரான்ஸ் நாட்டில் லெப்வி என்ற இடத்தில் 1650 ஆம் ஆண்டு, ஆகஸ்ட் 15ம் திகதி அருட்தந்தை ஜான் பீட்டர் மெதாய், சே.ச என்பவரால் நிறுவப்பட்டது.

அன்றைய கால கட்டத்தில் பிரஞ்ச்சுப் போரினால் பாதிக்கப் பட்ட மக்களுக்கு தோள்கொடுக்கவும், வறுமையிலும் சமூக நீதி மறுக்கப்பட்ட நிலையில் இருக்கும் மக்களை உயர்த்தவும் இச்சபையை நிறுவினார். எம்சபையானது அப்போஸ்தலிக்க பெண் துறவற சபைகளில் மிகவும் பழமையான ஒன்று என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இன்று உலகலாவிய ரீதியில் பல பணிக்கூற்றுக்களாக வகைப்படுத்தப்பட்டு இச்சபையானது பரிணாம வளர்ச்சி பெற்றுள்ளது. குறிப்பாக 18 நாடுகளில். 38 கிளைகளாக விருட்சம் பெற்று ஒரு பெரிய ஆலமரமாக இறைவன் துணையுடன் வளர்ந்து நிற்கிறது.

"மனிதனை இறைவனோடும் மனிதனை மனிதனோடும் இணைத்திட" என்ற எம் சபையின் நோக்கத்தை வாழ்வாக்கி "எல்லோரும் ஒன்றாய் இருப்பார்களாக" என்ற ஆன்மீகத்தை உள்வாங்கியவர்களாய், பெண்கள், குழந்தைகள், விதவைகள், தாழ்த்தப்பட்டவர்கள், ஏழைகள் போன்றோரை இலக்கு மக்களாக கொண்டு எம் சபை சகோதரிகள் பல்வேறு பணிகளை முன்னெடுத்து வருகின்றனர். குறிப்பாக, கல்விப்பணி, மருத்துவப்பணி, சமூகமாற்றப்பணி, சீடத்துவப்பணி, சிறைப்பணி, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, சட்டஉதவிகள் வழங்குவது போன்ற பிரதான பணிகளை உலகத்தின் நாலாபுறமும் ஆற்றி வருகின்றனர்.

குறிப்பாக இலங்கை மண்ணில் போரினால் பாதிக்கப்பட்ட எம் உறவுகளாகிய தமிழ் மக்களை "உடனிருந்து ஆற்றுபடுத்துதல்" என்ற நோக்கோடு அன்றைய ஆயர் மேதகு அருட்கலாநிதி இராயப்பு ஜோசப் ஆண்டகை அவர்களின் அனுமதியோடு 2011ஆம் ஆண்டு மன்னார் மறைமாவட்டத்தில் தங்களது ஆற்றுகை பணியைத் துவங்கினர். 2017ஆம் ஆண்டு யாழ் மறைமாவட்டத்தில் மணற்காடு என்ற பங்கில் இதற்கென ஒரு இல்லம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஆன்மீகப்பணி, கல்விப்பணி, சமூகப்பணி, ஆங்கிலபுலமை பயிற்சி, மற்றும் ஆற்றுப்படுத்தல் போன்ற பணிகளை எம் சபை மிகவும் சிறப்பாக இன்றுவரை மேற்கொண்டு வருகின்றது.

தூய வளனாரின் பாதுகாவலில் இறைப்பணி ஆற்றுகின்ற எம் வளனார் சபை அருட்சகோதரிகள், பணி வாழ்வில் பல சவால்களுக்கு முகம் கொடுத்தாலும் மனம் தளராமல் இறைவன் துணையோடு மேலும் மேலும் தம் பணியை விரிவுபடுத்தி செயற்படுத்தி வருவதையிட்டு இறைவனுக்கு முதல் கண் எம் நன்றியை உளமார தெரிவித்து கொள்வதுடன், எம் சபை சகோதரிகள் ஒவ்வொருவரும் ஆழமான இறைபற்றும், சபைபற்றும், ஏழை எளியவர் மட்டில் இரக்கமும், எளிமையான எதார்த்தமான உள்ளமும் , பிறரது தேவைகளை உணர்ந்து செயல்படும் திறனும் பெற்று, எங்கள் சபையின் நோக்கு இலக்குக்ளுக்கு ஏற்றால்போல் தனித்தன்மையோடு பணி செய்திட உங்கள் உடனிருப்பையும், செபங்களையும், ஆசீரையும் வேண்டி நிற்கின்றோம்.

## தரணிக்குளம் தூய பற்றிமா அன்னை ஆலயத் திருவிழா



வவுனியா தரணிக்குளம் பங்கின் துணை சிற்றாலயமான மணிபுரம் தூய பற்றிமா அன்னை ஆலயத் திருவிழா மிகவும் சிறப்பான முறையில் நடைபெற்றது, சிற்றாலயமாக இருந்தாலும் திருவிழாத் திருப்பலி திருஅவையோடு ஒன்றித்து பயணிக்கும் வகையில் மிகவும் சிறப்பாகவும், அமைதியாகவும், இறைஉணர்வையும் அன்னையின் அன்பையும் உணர்ந்துகொள்ளும் வகையில் மறையுறைகள் அமைந்திருந்தன. திருவிழாத் திருப்பலியினை பங்குத்தந்தை அருட்பணி பிறேமானந்தம் அடிகளார் ஒப்புக்கொடுத்தார். மணிப்புர ஆலய மக்களுக்கு மன்னா பத்திரிகை சார்பாக திருவிழா நல்வாழ்த்துக்களையும் கூறி நிற்கின்றோம்.●

## சமணங்குளம் அற்புத குழந்தை இயேசு ஆலய திருவிழாத் திருப்பலி



கடந்த 21.05.2022 அன்று காலை 07.00 மணியளவில் சமணங்குளம் அற்புத குழந்தை இயேசு ஆலயத் திருவிழா திருப்பலியானது திருச்செபமாலையுடன் ஆரம்பிக்கப்பட்டு கூட்டுத் திருப்பலியாக ஒப்புக்கொடுக்கப்பட்டது.

இத்திருப்பலியை வரோட் நிறுவனத்தின் இயக்குனர் அருட்பணி வின்சன் டீ போல் குரூஸ் அடிகளாரின் தலைமையில் பங்குத்தந்தை அருட்பணி S.K.தேவராஜா கொடுதோர் EV அடிகளார் மற்றும் உதவிப்பங்குதந்தை திருத்தொண்டர் கிளின்ரன் ஆகியோரும் இணைந்து நிறைவேற்றியிருந்தனர். எமது மன்னா பத்திரிகை சார்பான திருவிழா நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலையருவியினால் நடாத்தப்பட்ட திருப்பாடுகளின் காட்சி தவக்கால ஆற்றுகை

1ம் பக்கத் தொடர்ச்சி

இந் நிகழ்வினை சிறப்புற ஆயத்தம் செய்து நடாத்தி முடித்த அருட்பணி M.செல்வநாதன் பீரிஸ் அடிகளார், கலையருவியின் கலைஞர்மன்றம் மற்றும் அதற்கு உதவியவர்கள் அனைவருக்கும் மன்னா பத்திரிகை சார்பாக பாராட்டுக்களையும் இறையாசீரையும் தெரிவித்து நிற்கின்றோம்.













# முன்னாள் ஆயர் அமரர் மேதகு இராயப்பு ஜோசேப்பு ஆண்டகை நினைவு தின நிகழ்வு

1ம் பக்கத் தொடர்ச்சி

திருப்பலியின் முடிவில் நினைவுப் பேருரை நடைபெற்றது அதில் யாழ் மறைமாவட்ட குருவான அருட்பணி ரவீந்திரன் அடிகளாரும் நினைவுப்பேருரை நிகழ்த்தினார். மேலும் பல குருக்களும் துறவிகளும் கலந்துகொண்டதுடன் பொதுமக்களும் இணைந்து எமது மறைந்த முன்னாள் ஆயருக்கான செபங்களை முன்னெடுத்திருந்தனர்.








## மன்னார் மறைமாவட்டம் ரீதியிலான நினைவேந்தல் நிகழ்வு

1ம் பக்கத் தொடர்ச்சி

ஆனால் இலங்கை முழுவதும் அதாவது தென் பகுதி உட்பட இலங்கை முழுவதும் நினைவேந்நல் நிகழ்வுகள் நடைபெற்றது. இது சகல மத ஸ்தலங்களிலும் பொது இடங்களிலும் இன்னும் இதற்கென அமைக்கப்பட்ட நினைவுத் தூபிகளின் இடங்களிலும் சிறப்பாக முள்ளிவாய்க்காலிலும் இந்த நிகழ்வு நடைபெற்றது.


ஏராளமான மக்கள் ஒன்றுகூடி தங்கள் மனதினில் இருந்த காயங்களை கவலைகளை சொல்லி அழுது தங்கள் பிள்ளைகளுக்காய் தங்கள் உறவுகளுக்காய் செபித்தார்கள். ஏனையவர்கள் கூடி நின்று அவர்களிற்கு ஆறுதல் கூறினார்கள். இவ்வாறான நிகழ்வு இம்முறை நடைபெற்றது இந்த மக்களிற்கு மனதிலே இருக்கக்கூடிய காயங்களை கொஞசம் குறைத்ததாக தெரிகின்றது. தொலைந்து போன இழந்து போன உயிரிழந்து போன எம் உறவுகளினுடைய கனவுகள் நனவாக வேண்டுமென்று நாங்கள் எதிர்பாத்து நிற்கின்றோம். சிறப்பான முறையிலே எமது மன்னார் மறைமாவட்டத்திலே எம்முடைய ஆயர் இல்லத்திலே ஆயர் குருமுதல்வர் தலைமையில் சகல குருக்களும், துறவியினரும் இணைந்து இந் நினைவேந்தலை நடத்தியிருந்தனர். அதனைத் தொடர்ந்து மன்னார் நகரத்தின் மத்தியில் அமைந்துள்ள மடுமாதா திருச் சுருபத்தின் முன்னதாக இந்த நினைவேந்தல் நிகழ்வு மறைமாவட்டம் ரீதியாக குருக்கள் துறவிகள் இறைமக்கள் சேர்ந்து ஆரம்பிக்கப்பட்டு திருச்செபமாலை பவனியாக புனித செபஸ்ரியார் பேராலயத்தை வந்தடைந்து அங்கு நினைவேந்தல் நிகழ்வுகள் நற்கருணை ஆராதனையோடு நடந்து முடிந்தது. இறந்துபோன காணாமல்போன உறவுகளிற்கு விசேட விதமாக இறந்து போன உறவுகளுக்கு நித்திய இளைப்பாற்றியும் காணாமல் போன உறவுகள் மிக விரைவிலே எம் கரங்களிலே கிடைக்க வேண்டும் என்று சொல்லியும் மன்னார் மறைமாவட்டமாக ஒன்றுகூடி செபித்தார்கள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மே 18 நினைவேந்தல் நிகழ்வுகள்

## மன்னார் மறைமாவட்ட நினைவேந்தல் நிகழ்வு


## கொழும்பு காலிமுகத்திடல் நினைவேந்தல் நிகழ்வு





கொழும்பு காலிமுகத்திடலில் முதல்முதறையாக முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு போராட்டகாரர்களால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. சுடர் ஏற்றப்பட்டு அக வணக்கமும் செலுத்தப்பட்டது. இதில் சிங்கள மக்களும் கலந்துகொண்டதுடன் நினைவேந்தல் உரையும் இடம்பெற்றது. இதனைத்தொடர்ந்து முள்ளிவாய்க்கால் கஞ்சியும் வழங்கப்பட்டது.

## வவுனியா வேப்பங்குளம் பங்கு நினைவேந்தல் நிகழ்வு








# புனிதர் பட்டம் பெறும் முதல் தமிழர் தேவசகாயம்பிள்ளை

1ம் பக்கத் தொடர்ச்சி










நீலகண்டன் சிறுவயதிலேயே பல மொழிப்புலமை, கலைத்திறமை, இராணுவ ஆயுதங்களைக் கையாளும் திறமை என பல்வேறு திறமைகளைப் பெற்றிருந்தார். அதன் காரணமாக அப்போதைய திருவாங்கூர் சமஸ்தான மன்னர் மார்த்தாண்ட வர்மாவின் பத்மநாபபுரம் கோட்டையில் நீலகண்டன் உயர் அதிகாரியாக பணிபுரிந்து வந்தார் குறிப்பாக ராணுவ விவகாரங்கள் சார்ந்த பணிகளைக் கவனித்து வந்தார்.

இந்த காலகட்டத்தில் தான் நீலகண்டன் கிறிஸ்தவராக மாற வேண்டிய சூழல் ஏற்படுகிறது. அதாவது கடந்த 1741ல் டச்சு படைகள் குளச்சல் துறைமுகத்தைக் கைப்பற்றுவதற்காகத் திருவாங்கூர் மன்னருடன் போர் நடத்தியது. இதில் மன்னர் மார்த்தாண்ட வர்மாவின் படைகள் டச்சுப் படைகளைத் தோற்கடித்தது. இதனையடுத்து, டச்சுப்படை தலைவரான கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்த டெனடிக்டுஸ் தே டிலனாய் சிறை பிடிக்கப்படுகிறார். அதன் பின் ஒரு கட்டத்தில் டிலனாயை மன்னர் மார்கண்ட வர்மா தனது படையின் ஆலோசகராக நியமித்ததுள்ளார். படை ஆலோசகர் என்ற முறையில் இராணுவ விவகாரங்களைக் கவனித்து வந்த அதிகாரி நீலகண்டன் டிலனாயுடன் நண்பராகப் பழகி உள்ளார். அப்போது திடீரென நீலகண்டன் வீட்டில் கடும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டு மனவேதனைக்கு ஆளாகியுள்ளார். அரச கட்டளையை மீறிய தேவசகாயம்பிள்ளை இந்த சமயத்தில் டிலனாய் கிறிஸ்தவ மதம் குறித்தும் இயேசு குறித்தும் பல்வேறு விஷயங்களைக் கூறவே அதைக் கேட்டறிந்த நீலகண்டன் முறைப்படி திருமுழுக்குப்பெற்று தன்னை ஒரு கிறிஸ்தவனாக மாற்றிக் கொண்டதாக வரலாறுகள் கூறுகின்றன. மேலும் அன்றிலிருந்து நீலகண்டன் என்ற பெயரை மாற்றிவிட்டு தேவசகாயம்பிள்ளை என்று தனது பெயரை மாற்றிக் கொள்கிறார்.

இதற்கிடையில் தேவசகாயம்பிள்ளை மதம்மாறிய விவகாரம் மன்னர் மார்த்தாண்ட வர்மாவுக்கு தெரிய வருகிறது. அந்த காலகட்டத்தில் உயர் ஜாதி இந்துக்கள் வேறு மதத்தைத் தழுவக்கூடாது என்பது அரச கட்டளை ஆகும் எனவே அரச கட்டளையை மீறிய காரணத்திற்காக தேவசகாயம்பிள்ளை சிறை வைக்கப்படுகிறார். இருப்பினும் மனம் மாறாததால் தேவசகாயம்பிள்ளையை எருமை மாடு மீது அமர வைத்து கரும்புள்ளி செம்புள்ளி குத்தி பல்வேறு ஊர்களுக்கு அழைத்துச்செல்ல மன்னர் கட்டளையிட்டு உள்ளார். தேவசகாயம்பிள்ளை சென்ற இடங்களில் எல்லாம் அவரை வணங்கிய கிறிஸ்தவர்களுக்கு பல்வேறு அற்புதங்கள் நிகழ்ந்ததாகவும் கூறப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்டுரை

# “மீட்புத் திட்டத்தில் நல்ல தந்தை புனித யோசேப்பு”

அருட்கலாநிதி அ. கிறிஸ்ரி றூபன் பெர்னான்டோ.
இயக்குனர், புனித யோசே வாஸ் இறையியல் கல்லூரி.
இயக்குனர், மன்னார் மறைமாவட்ட திருவிவிலிய ஆணைக்குழு.

**புனித யோசேப்புவின் வாழ்வைப் பற்றி பல்வேறு விதமாக எழுதப்பட்ட 'விவிலியப் புற நூல்கள்' ஆன இந்நூல்களைக் குறித்த திருஅவையின் நிலை என்ன?**

அப்போஸ்தலர்களின் காலத்திலேயிருந்து, புனித இரேனியுஸ் 'விவிலியப் புற நூல்' (apocrypha) என்பது 'போலியானது' என்று சுட்டிக்காட்டினார். புனித தேர்த்தூலியன் இந்த நூல்கள் 'தவறானவை' என்று வாதாடினார். திருஅவையின் தந்தையர்கள், “மரியாவும் யோசேப்பும் மீட்பு வரலாற்றிலே கடவுளோடு ஒத்துழைக்கும் துணைக் கருவிகளே என்ற நிலை மறக்கப்பட்டு, இந்நூல்களிலே அவர்கள் மிகைப்படுத்தப்பட்டு பேசப்படுகிறார்கள்” என்று குறிப்பிடுகின்றனர். இந்த நூல்கள் ஓரளவான 'இலக்கிய மதிப்பீட்டை' கொண்டிருக்கின்றனவே தவிர, இவை உண்மையான வரலாற்று நிகழ்வுகளை காலக்கிரமத்தின்படி ஆதாரமாகக் கொண்டிருக்கவில்லை என்பதே உண்மையாகும்.

இந்த நூல்கள் விவிலியப் புற நூல்களாய் இருப்பதற்கு மூல காரணம், இவை புனித யோசேப்புவின் கன்னிமை விரதத்துவத்தைப் பற்றிப் பேசுவதில் தவறி விடுகின்றன. இந்த நூல்களின் விபரிப்பின்படி, யோசேப்பு மனைவியை இழந்த ஒரு விதவையாகவே காணப்படுகிறார். அதன் பின்னர் அவர், இரண்டு வருடங்களின் பின்னர்தான் மறுமணம் செய்ய மரியாவுக்கு ஒப்பந்தமாகிறார். அது உண்மையாயின், ஏற்கெனவே திருமணமானவர் எப்படி இயேசுவின் வளர்ப்புத் தந்தையாக முடியும்? தூய்மையில் நிலைத்திருக்க முடியும்? திருக்குடும்பத்தின் பாதுகாவலராக முடியும்? என்ற சந்தேகங்கள் இந்த நூல்களைக் குறித்து எழுந்தன. புனித ஜெரோம், “இவ்வாறாக விவிலியப் புற நூல்கள் சுட்டிக்காட்டும் நற்செய்திகளின் அடிப்படையில் கட்டப்படாத நிகழ்வுகள், நம்பிக்கையினைக் குலைக்கின்றன” என்று கண்டிக்கிறார். அதேவேளை, இந்த நூல்களில் காணப்படும் புனித யோசேப்புவின் வாழ்க்கை வரலாற்றைப் பற்றிய சில 'வலியுறுத்தும் குறிப்புக்கள்' நற்செய்திகளின் அடிப்படையினையும் காட்டுகின்றன.

**புனித யோசேப்பு திருஅவையில் அன்றும் இன்றும்**

**முன்னுரை**

திருஅவையிலே இன்று அன்னை மரியாளுக்கு அடுத்தபடியாக, அதிகமான பக்தி முயற்சிகளையும், சிறப்புப் பாதுகாவல் வேண்டுதல்களையும் கொண்ட ஒரு புனிதராக யோசேப்பு காணப்படுகிறார் என்றால் அது மிகையாகாது. தொடக்க திருஅவையின் காலம் தொட்டே, மரியாவின் மாசில்லாத கன்னித்தன்மை போற்றப்பட்ட இடங்களில் எல்லாமே புனித யோசேப்பும் மகிமைப்படுத்தப்பட்டார். இயேசுவின் மீட்புத் திட்ட அலுவலிலே, புனித யோசேப்பின் பங்களிப்பை நாம் ஒருபோதும் மறக்கவே முடியாது.

**திருஅவையின் ஆரம்ப வளர்ச்சிக் காலம் (கி. பி. 33 - கி. பி. 2ஆம் நூற்றாண்டு வரை)**

நற்செய்தியாளர்களான மத்தேயு (கி.பி. 70-80) மற்றும் லூக்கா (கி.பி.85-90) இயேசுவைக் குறித்த நற்செய்திகளை எழுதுகின்ற போது அவற்றின் தொடக்கத்திலேயே இயேசுவின் குழந்தைப் பருவத்தில் புனித யோசேப்பின் பங்கு எவ்வளவு முக்கியம் வாய்ந்தது என்பதை சுட்டிக்காட்டுகின்றனர். அதனை அண்மித்த காலங்களிலே தொடக்கத் திருஅவையிலே மரியாவின் கன்னிமைக்குப் பாதுகாப்பு அளிப்பதற்காக யோசேப்பைக் குறித்த கற்பனைக் கதைகள் உருவாகின. அவற்றின் தொகுப்பைத்தான் நாம் விவிலியப் புற நூல்களான தோமாவின் நற்செய்தி, மரியாவின் குழந்தைப்பருவ நற்செய்தி, யாக்கோபுவின் நற்செய்தி போன்ற நூல்களிலே காண்கின்றோம். இந்தக்கால கட்டத்தில்தான் புனித யோசேப்பு ஏற்கெனவே திருமணம் முடித்து மனைவியை இழந்தவர் என்ற தவறான எண்ணங்களும், யோசேப்பு திருமணம் முடித்த முதல் மனைவிக்கு பிறந்தவர்களே நற்செய்தி கூறுகின்ற (மாற் 6:3 மத் 13:55 யோவா 7:3) இயேசுவின் சகோதர சகோதரிகள் என்ற தவறான கருத்துக்களும் அவற்றிற்கான விளக்கங்களும் தலைதூக்கின.

**திருஅவையின் தொடர் வளர்ச்சிக்காலம் (கி. பி. 3ஆம் நூற்றாண்டு - 4ஆம் நூற்றாண்டு வரை)**

3ஆம் நூற்றாண்டு காலப்பகுதியிலே எகிப்திலே கிறீஸ்துவை ஏற்றுக்கொண்டவர்கள் அதிகரித்ததன் காரணம் திருக்குடும்பத்தை அழைத்துக்கொண்டு யோசேப்பு அங்கு சென்றதும், அவர் அங்கே முன்மாதிரிகையான வாழ்க்கையே வாழ்ந்தார் என்ற எண்ணம் அந்நாட்டு மக்கள் மத்தியிலே மேலோங்கியதால் அங்கே யோசேப்பு மீதான பக்தி இன்னும் அதிகமாக வளரத் தொடங்கியது. இதைக் குறித்துத்தான் கி.பி. 215ல் அலெக்சாந்திரியாவின் கிளமெந்த் “புனித யோசேப்பு தலைமையிலே திருக்குடும்பம் எகிப்தில் நுழைந்தபோது, இங்கிருந்த பேய்களின் கோவில்கள் இடிந்து வீழ்ந்தன” என்று கூறுகிறார்.

4ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே யோசேப்புவைக் குறித்த தவறான கருத்துக்களையும் கற்பனை கதைகளையும் எதிர்த்த திருஅவையின் தந்தையர்கள் அவற்றிகெதிராக பல போதனைகளை மேற்கொண்டார்கள். மரியா யோசேப்பின் இரண்டாவது மனைவி என்ற தவறான கருத்தை கண்டித்த புனித ஜெரோம் (கி.பி.347-420) “மரியாவின் பொருட்டு யோசேப்பும் கன்னிமையுடன் இருந்தார். யோசேப்புக்குப் பல மனைவியர் இருந்தனர், அவர்களுக்குப் பிறந்தவர்களே இயேசு ஆண்டவரின் சகோதர சகோதரிகள் என்ற சிலரது கண்டுபிடிப்பானது அவர்களின் மடைமைத்தனத்திலிருந்து பொங்கி வழிந்து வருகின்றது” என்று கண்டிக்கின்றார். யோசேப்பு ஜூலை 20ம் நாள் இறந்ததாகவும், அதனை அடிப்படையாகக் கொண்டு அவருக்கு இந்த நாளிலே விழாக் கொண்டாடும் வரலாறு எகிப்திலேதான் தொடங்கியது.

(அடுத்த இதழில் தொடரும்)

### 2ம் பக்கத் தொடர்ச்சி
**துறவற அர்ப்பண வாழ்வில்...**

மேலும் மன்னார் மறைமாவட்ட பெரும் மதிப்புக்குறிய குருமுதல்வர் அருட்பணி கிறிஸ்நாயகம் அடிகளார், மன்னார் மறைமாவட்ட மறையாசிரிய இயக்குனர் அருட்பணி டலிமா அடிகளார், அருட்பணி எமிலியாம்ஸ்பிள்ளை அடிகளார், மற்றும் மறைமாவட்ட அருட்தந்தையர்கள் பலரும் இணைந்து இத்திருப்பலியினை சிறப்பித்திருந்தார்கள், திருப்பலி நிறைவில் கலை நிகழ்வுகளும், அருட்சகோதரியை பாராட்டும் நிகழ்வும் நடைபெற்றது, நிகழ்வுகள் அனைத்தையும் சிறப்புற ஆயத்தம் செய்து ஒழுங்கமைத்து நிறைவேற்றிய பங்குத்தந்தை, பங்குமக்கள் அனைவருக்கும் நன்றிகள்.

துறவற அர்ப்பண வாழ்வில் 25வது ஆண்டு நிறைவினைக் கொண்டாடும் அருட்சகோதரி அவர்களுக்கு மன்னா பத்திரிகை சார்பான இதயப்பூர்வமான நல்வாழ்த்துக்களையும், செபங்களையும் கூறி நிக்கின்றோம். உங்கள் பணி மென்மேலும் சிறப்புற அமைய நல்வாழ்த்துக்கள். ●

### 2ம் பக்கத் தொடர்ச்சி
**டிவைன் மெர்ஷி தியான மையமானது...**

மேலும் மன்னார் மறைமாவட்ட பெரும் மதிப்புக்குறிய குருமுதல்வர் அருட்பணி கிறிஸ்நாயகம் அடிகளார், மன்னார் மறைமாவட்ட மறையாசிரிய இயக்குனர் அருட்பணி டலிமா அடிகளார், அருட்பணி எமிலியாம்ஸ்பிள்ளை அடிகளார், மற்றும் மறைமாவட்ட அருட்தந்தையர்கள் பலரும் இணைந்து இத்திருப்பலியினை சிறப்பித்திருந்தார்கள், திருப்பலி நிறைவில் கலை நிகழ்வுகளும், அருட்சகோதரியை பாராட்டும் நிகழ்வும் நடைபெற்றது, நிகழ்வுகள் அனைத்தையும் சிறப்புற ஆயத்தம் செய்து ஒழுங்கமைத்து நிறைவேற்றிய பங்குத்தந்தை, பங்குமக்கள் அனைவருக்கும் நன்றிகள்.

துறவற அர்ப்பண வாழ்வில் 25வது ஆண்டு நிறைவினைக் கொண்டாடும் அருட்சகோதரி அவர்களுக்கு மன்னா பத்திரிகை சார்பான இதயப்பூர்வமான நல்வாழ்த்துக்களையும், செபங்களையும் கூறி நிக்கின்றோம். உங்கள் பணி மேலும் சிறப்புற அமைய நல்வாழ்த்துக்கள். ●

### 2ம் பக்கத் தொடர்ச்சி
**அருட்பணி. செ. அந்தோனிமுத்து...**


அதன் பின்னர் யூபிலி விழா நாயகருக்கு பங்கு மக்களால் கௌரவிப்பு நிகழ்வு இடம் பெற்றது. தாழ்வுபாடு ஆலய பாடகர்குழுவினரால் வாழ்த்துப்பாடல் பாடப்பட்டது. வாழ்த்துப் பாமாலை வாழ்த்துக்கவிதை வாசித்து அளிக்கப்பட்டன. விழா நாயகரை வாழ்த்தி மேதகு ஆயர்தந்தை மற்றும் அமல மரித்தியாகிகள் சபை வடமாகாண முதல்வர் ஊர்ப் பெரியோர்களால் சிறப்புரைகள் வழங்கப்பட்டன. ஈற்றில் கிராம எழுச்சி பாடலுடன் கௌரவிப்பு நிகழ்வு நிறைவு பெற்று மதிய போசன விருந்தும் இடம் பெற்றது அனைத்து நிகழ்வுகளும் தாழ்வுபாடு பங்குதந்தை வண.ஜெயபாலன் குரூஸ் அடிகளார் தலைமையில் சிறப்பாகவே நடைபெற்றன என்பது குறிப்பிடத்தக்கதாகும். ●

**வாசகர்களின் கவனத்திற்கு**

மன்னா பத்திரிக்கையில் ஆக்கங்களை விளம்பரங்களைப் பிரசுரிக்க விரும்பினால் அவற்றை குறித்த மாதத்திற்கு முதல் மாதம் 10ம் திகதிக்கு முன்னர் பதிவு செய்யுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 14 | 21 |
| 12 | 05 |
| 1936 | 2021 |



**திருமதி. சீ. மதலேனாள்**


(நறுவிலிக்குளம், வங்காலை)

அன்புத்தாய் அரவணைப்பில் ஆறதலாய் வாழ்ந்திருந்தோம்
ஆழிநிலை பெயர்ந்தாலும் அன்புநிலை பிறளாது அம்புவியில்
வாழ்ந்திருந்த அம்மாவே ஆருயிரே,
அன்புநிலை காட்டியெம்மை அழகாக வாழ வைத்தீர்.
அம்மாவே உன் நிழலும் அம்புவியில் மறைந்ததுவே
ஆண்டு ஒன்று ஆனாலும் அம்மாவே உமை மறவோம்.
அன்னை மரி மகனாரின் அரிய காலடியினிலே ஆறுதலை நீரடைய
அனுதினமும் வேண்டுகின்றோம்.

இவரின் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர் மற்றும் உற்றார், உறவினர்

## 23ம் ஆண்டு நினைவஞ்சலி

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 21 | 20 |
| 05 | 07 |
| 1975 | 1999 |



**திரு. றோய் ஜெயகாந்தா**

(நறுவிலிக்குளம், வங்காலை)

அன்பின் உடன்பிறப்பே ஆருயிரெம் தம்பி நீ
தாயாரும் தமையன்மார் தமக்கைகள் இங்கிருக்க
தன்மைநிலை அறியாது சென்றதுதான் எவ்விடமோ
உன் நிலைமை அறியாது உருகுகின்றோம் உன் நினைவில்
அன்பு அப்பா சென்றவழி அன்புத்தம்பி சென்று விட்டீர்
ஆண்டு இருப்பத்திமூன்று ஆனதுவே இப்போது ஆண்டவனின்
அடியினிலே ஆறுதலை அடைந்திடுவீர்
அனுதினமும் உமக்காக அன்பரனை வேண்டிடுவோம்

இவரின் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர் மற்றும் உற்றார், உறவினர்

## புதுக்கமம் கிராமத்தில் புனித யோசவ்வாஸ் திருச்சுரூப திறப்பு நிகழ்வு



புதுக்கமம் புனித சூசையப்பர் ஆலயத்தில் 27.04.2022 அன்று மணியளவில் அருட்பணி செல்வநாதன் பீரிஸ் அடிகளாரினால் புனித யோசவ்வாஸ் திருச்சுரூபம் ஆசிர்வதித்து திறந்து வைக்கப்பட்டதுடன். திருப்பலியும் நிறைவேற்றப்பட்டது●

**வாசகர்களின் கவனத்திற்கு**

**மன்னாவின்**
**புதிய விலை ரூபாய் 50**
**பக்கங்கள் 10**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்காத நினைவுகள்

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 24 08 1978



உதிர்வு 29 03 2018

### அந்தோனிப்பிள்ளை ஜேம்ஸ் தவராஜா (தவம்)

(முருங்கன்கமம், முருங்கன்)

"ஆண்டவர் தம் அன்பர்களின் சாவு அவரது பார்வையில்
மிகவும் மதிப்பிற்க்குரியது" (திரு. 116:5)

ஊர் போற்ற உற்றார் உறவினர் போற்ற
என்றும் சிரித்த முகமும் கவரும் பேச்சும் கொண்டு வாழ்ந்தாயே!
பட்ட துன்பம் போதுமென்றா பாதியில் நீ கடவுளை நாடிச் சென்றாயோ!
நான்காண்டுகள் ஓடி மறைந்தாலும், நீண்டு செல்லும்
உன் நினைவுகள் என்றும் மாறாது தவம்.
உன் ஆன்மா ஆண்டவர் சந்நிதியில் அமைதியுடன்
இளைப்பாற வேண்டி நிற்கும்

அன்பு அம்மா, சகோதரங்கள், மருமக்கள்,
பெறாமகள், மச்சான்மார், மச்சிமார்.
உற்றார், உறவினர்

## 11ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 24 12 1940



உதிர்வு 01 04 2011

### ம. தாசில்லா கூஞ்கு

(செபஸ்தியார் வீதி, மன்னார்)

பொறுமையிற் சிகரமாய் பாசத்தின் இன்ப ஊற்றாய் எம்மை
வளர்த்த அன்புத்தாயே எமக்கு கல்வி கற்பித்து இந்த உலகில்
நல்வாழ்வு வாழ வழி சமைத்தீர். ஆறு செல்வங்களை ஈன்றெடுத்து
பாசத்துடன் வளர்த்து கடமை முடிந்ததென எம்மை விட்டுப் பிரிந்து
இறைவனடி சேர்ந்து விட்டீர். தையல் கலையில் மன்னார்
மாவட்டத்தில் உமது பெயரை நிலைநாட்டினீர். உமது ஆன்மா
சாந்திபெற ஆண்டுகள் பதினொன்று கடந்தாலும்
எம் உள்ளங்களில் என்றும் வாழ்கின்றீர்

பிரிவால் துயருறும்
கணவன், மகன்மார், மகள்மார்,
பேரன் பேத்திமார்

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 12 04 1940



உதிர்வு 11 03 2022

### செபஸ்ரியான் மரியை

(தலைமன்னார் கிராமம்)


"உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவன்
இறப்பினும் வாழ்வான்" (யோவா 11:25)

அன்பு முகம் மறைந்தாலும்
அழியாத உங்கள் நினைவலைகள்
ஆறாத்துயர் எம் நெஞ்சை அனலாய் சுடுகிறதே!
உங்கள் நினைவுகள் எம் உயிரோடு உணர்வோடு கலந்து
இதயத்தில் என்றும் எங்களோடு வாழ்கின்றீர்கள்
எம்முன்னே உங்கள் முகம் எந்நாளும் உயிர்வாழும்
என்றும் உங்கள் நினைவுடன்.

பிரிவால் துயருறும்:- குடும்பத்தினர்

## 40ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 29 11 1924



இறப்பு 12 04 1982

### திரு. செபமாலை மொத்தம் போல்

(நறுவிலிக்குளம், மன்னார்)

சித்த மருத்துவர், புலவர்,
மாதோட்ட மண்ணின் முத்தமிழ் அறிஞர்,
ஆசிரியர், அதிபர், ஆராய்ச்சியாளர்,
பன்நூலாசிரியர் அவர்களின்
நாற்பதாம் ஆண்டு நிறைவு நினைவலைகள்
நிறைந்த விழிநீர் அஞ்சலிகள்

பிரிவால் நினைந்துருகும்
குடும்பத்தினர்,
அன்னாரின் மாணவர்கள்

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 19 12 1957



விண்ணில் 16 02 2021


### திருமதி. அந்தோனி கிறேஸ் இதயகீதம்

மொத்தம் போல் ஆனாள்பிள்ளை தம்பதிகளின்
அருமைப் புதல்வி கிறேஸ் இதயகீதம் அவர்களின்
ஓராண்டின் நினைவை கனத்த இதயங்களுடன்
நினைவுகூருகின்றோம்.

பிரிவால் துயருறும்
கணவர், பிள்ளைகள்,
உடன்பிறப்புக்கள்,
உறவினர்கள்.

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 05 09 1958



உதிர்வு 21 04 2020

அமரர்

### திரு. றோசாயில் லூக்காஸ்

(நெடுங்கண்டல், அடம்பன்)

"நீதிமான்களின் ஆன்மாக்கள் கடவுளின் கையில் உள்ளன
கடுந்தொல்லை எதுவும் அவர்களைத் தீண்டாது" (சா.ஞா 3:1)

அப்பா நீங்கள் எம்மைவிட்டுப் பிரிந்து ஆண்டுகள் இரண்டு
சென்றாலும் எம் இதயத்தில் நீங்கள் வாழ்கின்றீர்கள்.
எம்மை பெற்று வளர்த்து பண்போடும், பாசத்தோடும், எம்மை
பார்போற்ற வளர்க்க நீங்கள் பட்ட கஸ்ரங்களை
மறக்க முடியவில்லையப்பா. நாங்கள் வளர்ந்து உங்களை
கண் கலங்காமல் காப்பாற்றும் வயதில் ஏன் அப்பா எம்மை
விட்டுச் சென்றீர்கள். உங்கள் ஆசீர்வாதமும், துணையும்
என்றும் எமக்கு வேண்டும். அப்பா உங்கள் ஆன்மா
இறைவனில் அமைதிபெற தினமும் இறைவரம் வேண்டுகின்றோம்.

என்றும் உங்கள் நினைவுடன்: அன்பு மனைவி, பிள்ளைகள்

## 9ம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 13 07 1942



விண்ணில் 22 05 2013

### செபமாலை வேதநாயகம்

(ஆவணம், நானாட்டான்)

இறைவனின் நித்திய நிழலில் இனிதே இளைப்பாறும்
எம் ஐயாவே! ஒன்பது வருடங்கள் ஓடிப்போய் விட்டன
ஆனால் நிதமும் நினைவில் நிற்கின்றீர்கள்
எளிமையிலும், எழுச்சியிலும் எம்முடன் இருக்கின்றீர்கள்
வறுமையிலும் வளர்ச்சியிலும் வாழ வரம்
கேட்டருள்கின்றீர்கள் எங்களுக்காக இறைவனைத்
தொடர்ந்து வேண்டுங்கள். உங்கள் ஆன்மா இறைவனின்
சந்நிதியில் இளைப்பாற என்றும் வேண்டுகின்றோம்.

பிரிவால் துயருறும்
அன்பு மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்

## 31ம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 14 03 1928



இறப்பு 27 05 1991

### சீமான் சேவியர் மொத்தம்

((நறுவிலிக்குளம், வங்காலை))

கலங்காத மனம் கொண்டு காசினியில் வாழ்ந்திருந்தீர்
கவலைகளை மறந்துமது கடமைகளைச் செய்திருந்தீர்
தலைமை பல பெற்றுள்ளீர் தரணியோரால் போற்றப்பட்டீர்
தகப்பனாய் இருந்தெமது தேவைகளைப் பூர்த்தி செய்தீர்
கால வெள்ளோட்டத்தில் கடும்பகலின் நேரத்தில்
காலன் கை அகப்பட்டீர் காசினியில் உயிரை விட்டீர்
கலங்குகின்றோம் உம்மை எண்ணிக் கண்முன்னே நிற்கின்றீர்
காலந்தான் முப்பத்தி ஒன்று ஆண்டுதான் கடந்திட்டாலும்
நிலைபெற்ற தேவன் மகன் யேசுபரன் காலடியில்
நித்திய இளைப்பாறுதலை அடைய நிதம் மன்றாடுகின்றோம்.

இவரின் பிரிவால் துயருறும்: குடும்பத்தினர், உற்றார், உறவினர்கள்

## ஈர விழிகளுடன் 2ம் ஆண்டு நினைவலைகள்

பிறப்பு 10 11 2007



இறப்பு 16 04 2020

### செல்வன். லியோ றொமாறியோ குருஸ்

(பேசாலை)

அழகான உன் முகம் - அதில் அழியாத புன்னகை
விழுதென வேரூன்றிய விசுவாசக் குடும்பமதில்,
தொழுது தினமும் இறையோனைப் புகழ்ந்து பழுதின்றி
பக்குவமாய் வாழ்ந்த பாலகா!
பொழுது சாயும் முன் போய்விட்டாயோ மகனே!
அழுது புலம்புகின்றோம் ஆறுதல் தாராயோ!
துன்ப வேளையிலும் கவலை எதுவுமின்றி வாழ்ந்த எம் இளங்கதிரே!
இறைவனால் உம் நெஞ்சில் பொறித்த திருச்சிலுவைச் சின்னம்
நீ பட்ட வேதனையைத் தாங்கிக் கொண்டதன் அடையாளம்
ஆண்டு இரண்டு ஆனாலும் ஆறிடுமோ உம் துயரம்
நீ எமக்கு காட்டிய அன்புக்கும், பாசத்திற்கும் நெஞ்சார
கூறுகின்றோம் நன்றி எம் மாணிக்கமே.

இவரின் பிரிவால் துயருறும்: குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னா


# நினைவு கூருகின்றோம்..!

## 01ம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 1995 01 06



விண்ணில் 2021 05 11

**செல்வன். வேதநாயகம் டிறோன்றஞ்சித்**
(பிச்சகுளம், முருங்கன்)


"இதோ உம்மைப் பெயரிட்டு நாமே அழைத்தோம் நீ எனக்கே சொந்தம்" (எசா 43:1)

தாயவள் கருவினில் இருவராகி தனியொருவனாய் தரணியில் உயர்ந்து நின்றவனே! விதியின் விபரீத விளையாட்டில் வித்தாகிப் போனவனே! விழிநீரின் ஈரம் காயும் முன்னே ஓராண்டு நிறைவில் உன் உடன் பிறப்புக்கள்
உன் நிமிர்ந்த நடையும் சிவந்த விழிகளும் எம் நெஞ்சை விட்டு மறைய மறுக்கின்றது. ஓராண்டென்ன ஓராயிரம் ஆண்டானாலும் மறையுமோ உன் நினைவுகள் எம் உறவினை இடைநடுவே விட்டுப் பிரிந்த நீ இறைவனின் உறவினில் நிரந்தரமாய் இணைந்திருக்க உனக்காக இறைவனை இறைஞ்சி நிற்கின்றோம்.

பிரிவால் துயருறும்
அப்பா, அம்மா, அக்கா, தங்கை, தம்பி குடும்பஉறவுகள், நண்பர்கள்

## 03ம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 1951 10 09



விண்ணில் 2019 06 06

**திரு. சிமியோன் சந்தான்**
ஓய்வுநிலை கிராம அலுவலர்
(மாவிலங்கேணி, முருங்கன்)

"சீவியத்தில் நேசித்தோம் இறப்பிலும் மறவோம்"

உங்களைப் பிரிந்து மூன்று ஆண்டுகள்
சூரியன் உதிக்கிறது மறைகிறது அதன் சுழற்சிக்கிடையே,
வாழ்ந்தே ஆக வேண்டிய நிர்ப்பந்தம்...
ஏன்? எதற்காக? என்ற கேள்விகளுக்குத்தான் பதில் இல்லை
உங்கள் அன்புக்கும், அக்கறையுடனான பராமரிப்புக்கும்
நன்றியோடு இறையேசுவில் நீங்கள் இன்புற்றிருக்க
செபிக்கின்றோம்.

பிரிவின் துயரில்
அன்பு மனைவி ஜெயா,
உங்கள் உடன் பிறப்புக்களோடும்,
உறவுகளோடும்.

## 04ம் ஆண்டு நினைவஞ்சலி

"உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவர் இறப்பிலும் வாழ்வர்"

மண்ணில் 1966 04 25



விண்ணில் 2018 05 30

**திரு. சந்தியோகு சிறில்**
தபால் ஊழியர் (வஞ்சியன்குளம், வங்காலை)

அன்பின் உருவே! பாசத்தின் இலக்கணமே! இவ்விரண்டு ஆண்டுகள் கடந்தாலும், அப்பா என்ற உங்கள் பிரிவு என்றும் விரிவே! நான் நேசித்த முதல் உறவு நீங்கள் நான் சுவாதித்த முதல் கவிதை நீங்கள்.
கைப்பிடித்து நடைபோட பழக்கினீர்கள் நாங்கள் காலூன்றி நடைபோட நீங்கள் அமைதியடைந்தது ஏனோ!
நாட்டுக்கூத்து என்று அதிகம் அலைந்தீர்கள் ஆனால் எங்களை வையக நாடக மேடையில் தனியாய் தவிக்கவிட்டதேனோ புரியவில்லையே அப்பா!
உங்கள் ஆன்மா சமாதானத்தில் இளைப்பாற இறைவனை பிரார்த்தனை செய்கின்றோம். எங்களுக்கும் உங்கள் பிரார்த்தனைகள் தொடரும் என்பதே எமது விசுவாசம், அன்பு

உங்கள் பிரிவால் துயருறும்
அன்பு மனைவி, பிள்ளைகள், சகோதரிகள் மற்றும் குடும்ப உறவுகள்

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி

**திரு. அந்தோனிப்பிள்ளை யோசேப் (தொம்மை)**
(நாகதாழ்வு, திருக்கேதீஸ்வரம்)



மலர்வு 1957.08.10 — உதிர்வு 2021.05.14

அப்பா, ஓராண்டு ஓடி மறைந்தாலும் ஓயாது நீண்டு செல்லும் உம் பசுமை நினைவுகள், பாசத்துடன் வளர்த்து ஆளாக்கி விட்டேன் என்ற மனநிறைவினில் எம்மைவிட்டு பாதியில் சென்று விட்டீர்களோ அப்பா! உம் அன்பிற்காய் தினமும் ஏங்குகின்றோம் அப்பா! ஈரம் காயவில்லை எம் கண்ணீர் இன்னும் வற்றவில்லை அப்பா! வாழ்வாங்கு நீங்கள் வாழ்ந்ததன் வழி வாழ்க்கைத் துணையையும் உடன் அழைத்துச் சென்றீரோ அப்பா, இறுதிவரை துணையிருப்பீர்கள் என நம்பியிருந்தோம் எங்களை பாதியில் தவிக்கவிட்டு சென்றதேனோ ஆறுதல் இன்றி ஒவ்வொரு கணமும் துடித்து அழுகின்றோம். காலத்தின் சதி உங்களைப் பிரித்தாலும் நீங்கள் எங்களுடன் வாழ்ந்த நாட்கள் என்றுமே நினைவில் அழியாது
உம் ஆன்மா இறைவன் பரகதியில் இன்பமாய் இருக்க இருகரம் கூப்பி இறைஞ்சுகின்றோம்.

என்றும் உம் நினைவில் துயருறும்: பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரிகள், உற்றார், உறவினர்கள்.

## 2ம், 33ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 31.03.1956
உதிர்வு 07.03.2020





மலர்வு 01.01.1952
உதிர்வு 07.03.1989

**திரு. திருமதி.ம.யேசுதாசன் ஞானசவுந்தரி**
(செல்லமணி வைத்தியர், பரிகாரிகண்டல்)

செல்லமணியெனும் நாமம் ஜெகத்தினிலே நீர் பெற்று சிறந்ததோர் வைத்தியராம் சிறப்புடனே பணிபுரிந்தீர் நல்லதோர் மனையாளை இளம் வயதிலேயிழந்தும் தளராத மனதோடு கற்புநெறி காத்து தனயர்களை நீர் வளர்த்தீர். கல்லான மனதோடு கடும்போக்கு வாழ்வுடனே கடவுள் பயம் உள்ளவனாய் பாருலகில் வாழ்ந்து வந்தீர் வல்லபரன் தாள் பணிந்து வைத்தியத்திலுயர்ந்திருந்தீர். வானவனாரென்றென்றும் ஆன்ம சாந்தி உமக்கருள்வார்...

பிரிவால் வருந்தும்: குடும்பத்தினர்

## 12ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 1995 08 21



உதிர்வு 2010 06 11

**திரு. நீக்கிலஸ் கனிலன்**
சிறுக்கண்டல், முருங்கன்

கடவுள் மிகுதியான தாலந்துகளை உனக்கு தந்திருந்தபோது, இறை பணியில் நீ அதிசயிக்கத்தக்க சாதனைகள் எவ்வளவோ புரிந்திருக்கலாம். ஆனால் உனது கால்கள் மரணத்தை நோக்கி நடந்ததேனோ! உனது அறிவு தடுமாறியதேனோ! இருந்தாலும் மன்னிக்கின்ற கடவுள் உனக்கு இரக்கம் காட்டி அவருக்கு பணிபுரியும் ஒரு தூதனாக விண்ணகத்தில் வாழ்வதே இவ்வுலக வாழ்வை விட மேலானது. உனக்காக நாங்கள் தினமும் செபித்துக் கொண்டிருக்கின்றோம் எங்களுக்காகவும் இறைவனிடம் மன்றாடு மகனே!

என்றும் உன் நினைவுகளுடன்: அம்மா, அப்பா, அண்ணன், அண்ணி, ஜொமேல்சன், ஜெபிக்சன், உறவுகள்.

## 19ம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 1941 - 03 - 31



மறைவு: 2003 - 06 - 25

அமரர்:
டோமினிக் தேவதாசன் தூரம்

## 1ம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்: 1943 - 09 - 01



மறைவு: 2021 - 04 - 09

அமரர்:
தேவதாசன் யோசப்பின் றோச்

அன்பின் இலக்கணமாய் பாசத்தின் திருஉருவமாய் திகழ்ந்நத அன்புப் பெற்றோரே
ஆண்டுகள் பத்தொன்பதும், பன்னிரு திங்களுமாய் உருண்டோடியதே...
ஆண்டவன் மடியில் அமைதியாய் இளைப்பாற ஆண்டவனை வேண்டுகின்றோம்...


**"மன்னா பத்திரிகை"**
மன்னா அலுவலகம், கலையருவி,
இல: 202, தலைமன்னார் வீதி, மன்னார்.
தொ.இல: 023-2250789, 076-3801841
- mannamnrc@gmail.com - manna.lk - Mannar Catholic Media, Madhu Matha TV

**"மன்னார் கத்தோலிக்க அச்சகம்"**
கலையருவி, இல: 202, தலைமன்னார் வீதி, மன்னார்.
தொ.இல: 023-2223674, 077-5338732 / Email: mannarcatholicpress@gmail.com
சகல விதமான பதிப்பக வேலைகளும் நியாயமான விலையிலும்,
தரமான முறையிலும் அச்சிடப்படும்.

இப்பத்திரிகை மன்னாரில் உள்ள மன்னா அலுவலகத்தில் வடிவமைக்கப்பட்டு மன்னார் கத்தோலிக்க அச்சகத்தில் அச்சிடப்பட்டு மன்னா நிர்வாகத்தால் வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவு கூருகின்றோம்..!

## 6ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 30 05 1956 — உதிர்வு 07 04 2016



### திரு. செ. பீலிக்ஸ் ஜோர்ஜ் சந்தியோகு

"ஆண்டவர் இல்லத்தில் என் வாழ்நாள் எல்லாம் நான் குடியிருக்க வேண்டும்"

ஆண்டவர் தந்த அழகிய வாழ்க்கை - அதில் அப்பா! உங்களுடன் வாழ்ந்தது அற்புத வாழ்வு மறக்க முடியவில்லையே மாறாது மறையாது உங்கள் நினைவுகள் ஆறாத் துயர் எம் நெஞ்சை அனலாய் சுடுகின்றதே இரக்கமும், இறைபற்றும், ஊக்கமும், உதவுதலும் நீங்கள் எமக்களித்து சென்ற சொத்துக்கள் எம்மைப் பிரிந்து ஆண்டுகள் ஆறு ஆனாலும் உள்ளத்தாலும் உணர்வாலும் என்றும் எம்முடன் வாழ்கின்றீர்கள் கண்களில் கண்ணீர் முத்துக்களுடன் கலங்கி நிற்கின்றோம் உங்கள் ஆன்மா சாந்தி பெற இறைவனை வேண்டுகின்றோம்.

பிரிவால் வருந்தும்
மனைவி, மகன், உறவினர், நண்பர்கள்

## 4ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 13 03 1950 — உதிர்வு 04 04 2018



### திருமதி. மரியபத்திமா எட்வேட் வீரசிங்கம்

(பெரியநாவற்குளம், திருக்கேதீஸ்வரம்)

ஆண்டுகள் நான்கு கடந்திடினும் - இன்னும்
ஆறாத்துயரில் நாமுள்ளோம்
ஆறுதல் வார்த்தை பல கேட்டினும்
ஆட்கொள்ளுதே உங்கள் நினைவு
விழிப்பிலும் கனவிலும் உமது இன்முகம்
என்றும் எம்மைவிட்டு நீங்காதே அம்மா!
இறைவன் அடியில் எமக்காய் வேண்டிடும்
உங்கள் ஆன்மா சாந்திபெற வேண்டுமென
இறைவனை எந்நாளும் வேண்டுகின்றோம்.

பிரிவால் நினைந்துருகும்
அன்பு கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 12 11 1949 — ஆண்டவன் அடியில் 24 04 2021



### திருமதி. அந்திரேஸ் செபமாலை

[உயிர்த்தராசன்குளம், முருங்கன்]

"உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்"

உயிர்கொடுத்து உதிரம் கொடுத்து
நன்னெறியில் எமை வளர்த்து
நானிலம் போற்ற வாழ்ந்த எம் அன்னையே
ஓராண்டுகள் ஓடி மறைந்தாலும்
உன் நினைவுகள் எம்மைவிட்டு நீங்காதம்மா
எம் எண்ணத்தில் என்றும் வாழும்
நீங்கள் விண்ணுலகில் ஆண்டவர் அருகில்
என்றும் வீற்றிருப்பீர் மாண்புடனே.

பிரிவால் துயருறும்
அன்புக்கணவன், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்கள்.

## 31ம் நாள் நினைவஞ்சலி

மண்ணில் 10 03 1944 — விண்ணில் 05 03 2022



### அமரர். சுவாந்த குருஸ் வெலிச்சோர் (குமாரசிங்கம்)

(மாந்தை, மன்னார்)

"ஆண்டவர் தம் அன்பர்களின் சாவு ஆண்டவர் பார்வையில் மிக மதிப்பிற்குரியது. (தி.பா 116:15)

அன்பான எங்கள் ஐயாவே, தோளில் எம்மை
சுமந்தீரே! துவண்ட போதெல்லாம் துன்பம் துடைத்தீரே
துயரத்தை சொல்ல மொழி இல்லை
துடிக்கின்றோம் இங்கு உம் பிள்ளைகள்
கண்ணீரில் நீர் பொங்கி அழுகின்றோம் - என்றும்
கருத்தினில் உம்மை வைத்து தொழுதிடுவோம்
ஆண்டவன் அடியில் உம் ஆன்மா அமைதியில்
இளைப்பாற வேண்டுகின்றோம்

பிரிவால் துயருறும்
அருட்தந்தை எமில் எழில்ராஜ் அடிகளார், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி

"உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே என்னிடம் நம்பிக்கை கொள்பவன் இறப்பினும் வாழ்வார் (யோவா 11:25)

மண்ணில் 28 01 1940 — விண்ணில் 06 04 2021



### திருமதி. யோசப் செபமாலை

(பிச்சைகுளம், முருங்கன்)

எங்கள் அன்பு அம்மா ஆண்டொன்று மறைந்தாலும் ஆறிடுமோ எங்கள் துயரம். எம்மை அன்போடு வளர்த்து எங்களோடு இருந்த அந்த அழகான நாட்களை நினைக்கின்றோம் அம்மா வெளிநாடுகளில் வாழும் பேரப்பிள்ளைகளை ஒரு முறையாவது பார்க்க வேண்டுமென்று ஆசைப்பட்டீர்கள் அம்மா, காலத்தின் கோலம் பார்க்க முடியாமல் கடவுளிடம் சென்று விட்டீர்கள். உங்கள் ஆன்மா இறைவனில் இளைப்பாறி வானதூதரின் வரிசையில் சேர இறைவனை வேண்டுகின்றோம்.

பிரிவால் துயருறும்: கணவன். பிள்ளைகள், பேரப்பிள்ளைகள். மருமக்கள், அருட்சகோதரி குயினா. உறவுகள்.

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி

"உயிர்ப்பும், உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்"

பிறப்பு 28 05 1974 — இறப்பு 26 03 2021



### அமரர். வேந்தகோன் (காந்தன்)

(தோட்டவெளி)

இறைவன் பாதம் உன் ஆன்மா அமர்ந்து
ஓராண்டு ஓடி மறைந்ததே!
உன் நினைவுகளைச் சுமந்து எம் கண்கள்
இன்றும் கலங்குதே!
ஓய்வில்லா உன் பணியால்
பல்லுயிர்களை காத்து
கடவுளின் திருக்கரத்தில் உன் ஆன்மா
என்றும் இளைப்பாற இறையருள்
வேண்டுகின்றோம்.

பிரிவால் துயருறும்: சகோதரர்கள்

## 2ம் ஆண்டு நினைவஞ்சலி



### ச.அன்ரன் ராஜ் (சிவா)

ஓய்வுபெற்ற பொலிஸ் ஊழியர் [யாழ்ப்பாணம்]

அன்னை மடியில் 20.08.1963 — ஆண்டவன் அடியில் 28.12.2020

மறக்கவே முடியாத மனிதனே
இறக்கமுடியாத பாரமே - இனி
சுரக்க முடியாத பாசமே
நெஞ்சில் நிறைந்த சுவாசமே
அப்பா! அப்பா! அப்பா!
அகவை ஒன்றானதோ
உம்மை நாம் பிரிந்து
இறைவனில் இளைப்பாறிட
தினம் தினம் பிரார்த்திக்கின்றோம்

உம் பிரிவால் துயருறும்: குடும்பத்தினர்

## 7ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 13 08 1934 — உதிர்வு 27 03 2015



### திரு. பாவிலுப்பிள்ளை பிரான்சிஸ் சேவியர்

(இளைப்பாறிய அதிபர் - முத்தரிப்புத்துறை)

அன்பினில் அணைத்திடும் தந்தையாய்
எழுகின்ற துயரினில் உதவிடும் துணைவனாய்!
வழுவாது நெறியூட்டும் அறிஞராய்!
தோள்கொடுக்கும் நல் நண்பனாய்!
நிலையில்லா வாழ்க்கையில் வழிகாட்டும் ஆசானாய்!
உயரங்கள் தொட வைக்கும் ஏணியாய்!
அறிவை செதுக்கும் சிற்பியாய்!
ஐயா நீங்கள் வாழ்ந்தீர்கள், வாழ வைத்தீர்கள்!
ஏழாண்டு கடந்தாலும் ஆறாது எம் மனத்துயரம்
நின் ஆன்மா சாந்திபெற நிதமும் வேண்டுகின்றோம்.

அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள், உறவினர்கள்.

## 5ம் ஆண்டு நினைவஞ்சலி

"உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்"



### பிலேந்திரன் சிந்தாத்துரை

அன்னை மடியில் 02.01.1944 — இறைவன் அடியில் 17.04.2017

(சாவற்கட்டு, மன்னார்)



### சந்தியோ எட்வேட் (காந்தி)

அன்னை மடியில் 19.11.1947 — இறைவன் அடியில் 06.04.2017

(நாவாந்துறை, யாழ்ப்பாணம்)

அன்புக்கு இலக்கணமாய், பாசத்தின் பிறப்பிடமாய், கள்ளமில்லா உள்ளத்துடன் பாரினில் வாழ்ந்திர்கள் இத்தனை ஆண்டுகள் எம்மைவிட்டு சென்றாலும் அகலுமோ! உங்கள் நினைவு எண்ணிப் பார்க்க இயலாத ஏக்கத்தை எமக்கு அளித்து விட்டு எட்டாத்தூரம் சென்றீர்களோ? குழந்தைகளாக இருந்தபொழுது உம் அரவணைப்பிலும் பாதுகாப்பிலும் வாழ்ந்த நாட்கள் மீண்டும் வராதோ! என்று எம் இதயம் ஏங்குகிறது நீங்கள் காட்டிய பாதையிலேயே நாங்கள் நடக்கின்றோம் சமாதானத்தில் இளைப்பாறுங்கள் அப்பா.

பிரிவால் துயருறும் :- குடும்பத்தினர்

## 37ம், 10ம் ஆண்டு நினைவஞ்சலி



### திரு. குமாரசிங்க முதலியார் மரிசாற்பிள்ளை இராஜநாயகம்பிள்ளை

மலர்வு 06.04.1916 — உதிர்வு 02.04.1985



### திருமதி. இராஜநாயகம்பிள்ளை மேரிப்பிள்ளை

மலர்வு 02.04.1932 — உதிர்வு 27.04.2012

சித்திரை வந்தாலே, விழித்திரை மூடாது, நித்திரை கலைந்து, சிந்தை கலங்கிடுதே. ஐயா என்னும் எங்கள் குடம்ப அச்சாணி அவர் தேடிய தேட்டங்களாலும் கல்வி வழிகாட்டியதாலும் நல்வழியில் எம்மை செம்மையாய் செதக்கி வாழ்வித்தார். அம்மா என்னும் அற்புதச் சொத்து அன்பால் தியாகத்தால் அரவணைப்பால் ஆறுதலால் பிள்ளைகள் எம்மை பாசமாய் பாரினில் உயர்வாய் வளர்த்து வார்த்த உத்தம தெய்வம் உண்மைத் தெய்வங்களே, ஆண்டுகள் பல கடந்தாலும் ஆறாது மாறாது உங்கள் நினைவுகள் எம் உயிர் உள்ளவரை உங்களை எம் நெஞ்சமதில் நிறைத்து பூசிக்கின்றோம் தெய்வங்களே

பிரிவால் துயருறும்:- பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், உறவினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவு கூருகின்றோம்..!

## 7ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 24 08 1960 — உதிர்வு 10 03 2015



### அருட்தந்தை.அ.சகாயநாதன்
(திருவுளச்சபை)

அன்பிற்கு இலக்கணமாய் அவனியில் வாழ்ந்து,
இறைபணி செய்து பண்புடைமை காத்து பக்குவமாய்
வழிநடந்தீர் இரக்கத்தின் இருப்பிடமாய் ஈகை பல செய்து
எல்லோருக்கும் நல்லவராய் நாணயமாய் நடந்தீர்
ஏனோ இறைவன் இடைநடுவில் பறித்து விட்டான்...
துன்புற்றோர் துயர் துடைத்து துணைக்கரமாய்
அடைக்கலம் தந்த உம்மை ஆண்டவன்
ஏனழைத்தான் பண்புள்ளோரை பல காலம்
வாழவிடக் கூடாதென்றோ? என் செய்வோம்
இறைவன் சித்தம் இதுவெனில் காண முடியாத
சோகநிலையோடு இங்கிருந்து ஏங்கியழுகிறோம்.

அருட்தந்தை அவர்களின் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

## 31ம் நாள் நினைவஞ்சலி

மண்ணில் 09 12 1958 — விண்ணில் 17 03 2022



### திருமதி
### அருளப்பு செபமாலை (தங்கமணி)
(கள்ளிக்குளம், அடம்பன்)

ஆதரவளித்த அன்புக் கரங்களும்,
ஆறுதலளித்த அன்பு வார்த்தைகளும்
ஆதரவின்றி ஆறாத்துயரில் தவிக்கவிட்டு
ஆரவாரமின்றி அடங்கிப் போனதேனோ?
அம்மா...

பிரிவால் துயருறும்
அன்புக் கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

## 31ம் நாள் நினைவஞ்சலி

மண்ணில் 1940 09 08 — விண்ணில் 2022 02 23



### திருமதி.ஜோர்ஜ் ரெஜீனா
(உயிர்த்தராசன்குளம், முருங்கன்)

"இதோ உம்மைப் பெயரிட்டு நாமே அழைத்தோம்
நீ எனக்கே சொந்தம்" (எசா 43:1)

வாழ்ந்த காலமெல்லாம் எங்களை வாழ வைத்த
அம்மாவே! வானுலகு சென்றும் நீர் ஆசீர் வழங்க
செபிக்கும் அம்மாவே! எவ்வளவு தான் துன்பங்கள்
வந்தாலும் பொறுமையுடன் வாழ்ந்து மற்றவரைக்
கடமைப்படுத்தக் கூடாது என்று நினைத்து,
கண்ணிமைக்கும் பொழதினிலே அமைதியுடன்
இளைப்பாறச் சென்றாயோ அம்மா.

இவரின் பிரிவால் துயருறும்: மகன்மார்
திரு. ஜோர்ஜ் யேசுதாசன் குடும்பம்
(ஓய்வுநிலை அதிபர்)
திரு. ஜோர்ஜ் நவஞானம் குடும்பம் (சுவிஸ்)
திரு. ஜோர்ஜ் செபமாலை குடும்பம் (சுவிஸ்)
பேரப்பிள்ளைகள்

## 3ம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 1957 09 22 — உதிர்வு 2022 02 09



### திருமதி. ஞா. சறோசா ஞானமலர்
(பிச்சைகுளம், முருங்கன்)

அம்மா என்ற மூன்றெழுத்தை தினந்தோறும்
உச்சரிக்கின்றோம் நினைவில் இன்னொரு தடவை
உங்கள் முகத்தைக் காண நோயில் நீங்கள் பட்ட துன்பத்தை
மறக்க நினைக்கின்றது மனது ஆனாலும் முடியவில்லை
பார்க்கும் திசையெல்லாம் உங்கள் ஞாபக அலைகளும் சத்தமும்
காதில் ஒலித்துக் கொண்டே இருக்கின்றன
காலனவன் விரித்த வலையில் பலமுறை சிக்கி, போராடி,
பிழைத்து இறந்ததொரு தாயாய் எம்மோடு வாழ்ந்தீர்கள்
உங்கள் ஆன்மா இறைவனின் சந்நிதியில் இளைப்பாற
தினந்தோறும் இறைவனை வேண்டுகின்றோம்.

பிரிவால் நினைந்துருகும்
அன்புக்கணவர், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள், உறவுகள்

## 31ம் நாள் நினைவஞ்சலி

மண்ணில் 1956 12 17 — விண்ணில் 2022 02 14



### திருமதி
### நொய்லின் திரேசா ஞானசேகரம்
(முதலைகுத்தி, உயிலங்குளம்)

அன்பின் உறைவிடமே அம்மா!
உம் ஐந்து பிள்ளைகள் எம்மை கனிவுடன்
வளர்ந்து உயர்நிலைக்கு உயர்த்தி
மகிழும் வேளை பெற்ற மகிழ்ச்சி போதும் என்றா
அவசரமாக இறைவனில் இன்பம் காணச்
சென்று விட்டீர்கள்? நொடிப்பொழுதில்
நீறாகித் திரும்பிய உம் முகம் காண
ஏங்கித் தவிக்கின்றோம். உங்கள் ஆன்மா
இறைவன் பாதம் சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
பாசமிகு பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.

## ஓராண்டு நினைவஞ்சலி

மலர்வு 1998 06 26 — உதிர்வு 2021 03 09



### அந்தோனி டெல்சியா (அனுசா)
(பொன்தீவுகண்டல், முருங்கன்)


உயிர் உள்ளவரை உம்மை நேசித்தோம் இறந்த பின்பும்
உம்மை மறவோம். சுடர் விட்டெரிந்த எங்கள் செல்வமே,
இதயங்கள் இடிந்து நொறுங்க சொல்லாமல் சென்றாயோ!
இறைவனிடம் ஓராண்டு சென்றதம்மா, ஓயவில்லை
எம் அழுகை. நீர் வரும் வீதியை பார்க்கின்றோம்.
வெறிச்சோடி விட்டதம்மா நீர் இல்லா வீடு இருள்மண்டி
கிடக்குதம்மா. ஆறுதல் கூற யாருமில்லையம்மா.
அந்தரித்து போனோம் அம்மா மறுபிறப்பு ஒன்று இருந்தால்
நீர் எங்கள் குடும்பத்தில் பிறக்க வேண்டும்.
உமது ஆன்மா ஆண்டவரில் இளைப்பாற
அனுதினமும் வேண்டுகின்றோம்.

உம் பிரிவால் துயருறும்
அப்பா அம்மா, அக்கா, உறவுகள்.

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி

"வாழ்வில் என்னை நேசித்தவர்களே மரணத்திலும்
என்னை மறவாதீர்கள்"

மண்ணில் 1935 09 06 — விண்ணில் 2021 03 15



### திரு. சிறில் விக்டர் ஜெயசீலன்
(டிலாசால் வீதி, மன்னார்)

அன்பின் அப்பா! ஓராண்டு கடந்ததுவே
மறக்க முடியவில்லை உங்கள் பிரிவை.
காலங்கள் ஓடினாலும் நேசங்கள் மாறினாலும்
கண்முன்னே நீங்கிக் கனவாகிப் போனாலும்
மண்விட்டு மறைந்து மாயமாகிப் போனாலும்
ஏம் மனம் விட்டு மறையாமல் எம்மோடு வாழ்கின்றீர்.
அன்பாய், பகட்டில்லாமல், ஆரவாரமில்லாமல்,
பண்பாய் வாழ்ந்தவரே நீங்கள் இறைவனின்
சந்நிதியில் நிம்மதியாய் இளைப்பாற தினமும்
இறை இயேசுவை வேண்டுகின்றோம்.

உங்கள் நினைவுகளுடன்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 1952 06 19 — விண்ணில் 2021 03 30



### அமரர்
### ஆரோக்கியநாதர் அக்னேஸ் அம்மா
(நானாட்டான்)

ஆண்டொன்று போனாலும் ஆறவில்லை எம் துயரம்
அன்பெனும் மழை பொழிந்து
அகிலத்தில் எம்மை வாழ வழிவகுத்து
ஆதரையில் எம் வாழ்வின் உயர்வுக்காய்
அரும்பாடுபட்டு உழைத்த அம்மாவே!
அன்பு மனைவியாய்,
அணைத்து வளர்க்கும் அன்னையாய்,
ஆசையாய் அழைக்கும் அப்பம்மா, அம்மம்மாவாய்
வாழ்ந்த தெய்வமே
அடியவர் நாம் ஆண்டவனை வேண்டுகின்றோம்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
அன்புக்கணவன், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்கள்

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 11.07.1953 — மறைவு 21.04.2019


ஆண்டு மூன்று
போனாலும்
உங்கள் நினைவுகள்
எம்மை விட்டு என்றுமே
நீங்காது

### அமரர். திரு மைக்கல் மரியதாஸ்

பிரிவால் துயருறும்
அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள் மற்றும்
உற்றார், உறவினர், நண்பர்கள்.

## ஓராண்டு நினைவஞ்சலி

### திரு. ஆசீர்வாதம் சந்தியோகு
(முன்னாள் தவிசாளர், மாந்தைமேற்கு பிரதேச சபை)
கறுக்காக்குளம், வட்டக்கண்டல்



அவனி போற்றிய அன்பனே!
ஆறுதல் சொல்லிய அடைக்கலமே!
இறைநெறி மாறாத அடியானே!
ஈதலில் சலிக்காத வள்ளலே!
உழைப்பால் உயர்ந்த ஓவியமே!
ஊழல் இல்லாத தலைவனே!
எங்கள் இல்லத்தின் குலமகனே!
ஏழைகளின் தவிசாளனே!
ஒடிந்துபோய் நிற்கின்றோம்!
ஓராண்டு கடந்துமே!

பிறப்பு 1955.05.24 — இறப்பு 2021.04.25

இவரது பிரிவால் துயருறும்: குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org